**தூய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான நுழைவு உள்ளடங்கலான பாலின முன்னேற்ற செயற்திட்டம் - 2016**

---

தூய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான நுழைவு உள்ளடங்கலான பாலின முன்னேற்ற செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏபீபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 9158 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்ட உடன்படிக்கைக் கடிதத்தின் பிரகாரம், இலங்கை மின்சார சபையானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்படுத்தல் முகவராகவும் உள்ளது. கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமிய சமுதாயங்களிற்கான தூய எரிசக்திக்கான நுழைவை அதிகரித்தல் மற்றும் இலங்கை மின்சார சபையின் பயிற்சி திறன்கள் மற்றும் சேவை விநியோகம் என்பவற்றை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மானிய அமுல்படுத்தல் கையேட்டின் (vii) 33 ஆம் பிரிவின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 142 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.08 மில்லியன் தொகையானதுடன் அதில் ஐ.அ.டொலர் 873,975 வறுமை குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தினூடாக (ஜேஎவ்பீஆர்) நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும் ஐ.அ.டொலர் 211,200 இனை ஈரீசீ பவுண்டேஷனால் (ETC Foundation) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 நவம்பர் 08 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 நவம்பர் 08 இல் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர், இது 2017 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக்

கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதி கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதி கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்பதும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஊ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 66.40 மில்லியன் தொகையான சேவை இணைப்புக் கட்டணங்கள் மீண்டுவரும் தன்மையினை கருத்திற் கொள்ளாமல் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மின்சார சபையால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம், மூலதன வேலைகளுடன் தொடர்புடைய ஊழியர், மூலப்பொருள் மற்றும் மேந்தலைகள் செலவீனம் நியம கிரய முறைமையை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கப்பட்டது. எனினும், ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் மற்றும் செயற்திட்டத்தின் நடைமுறை வேலையின் கீழ் உள்ளடக்கப்பட்ட சேவை இணைப்புக் கிரயங்கள் உண்மைக்கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நன்கொடை முகவரிடமிருந்து அறவிட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட இலங்கை மின்சாரசபையால் மேற்கொள்ளப்பட்ட சேவை இணைப்புக்கள் தொடர்பாக ரூபா 17.22 மில்லியன் தொகையான கிரயங்கள் நிதிநிலைமைக் கூற்றில் இலங்கை மின்சார சபையால் அமர்த்தப்பட்ட மூலதனத்தின் கீழ் முறையற்ற விதத்தில் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 இணக்கஞ் செய்யப்படாத மீதி**

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியில் பராமரிக்கப்பட்ட கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்த ரூபா 120,473 தொகையான மீதி இலங்கை மத்திய வங்கியில் நிரூபிக்கப்பட்ட செயற்திட்டத்தின் சாதக மீதியான ரூபா 553,963 மீதியுடன் இணங்கியிருக்கவில்லை.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 1.08 | 142 | 78 | 0.045 | 6.6 | 0.62 | 90.3 |
| மொத்தம் | **1.08** | **142** | **78** | **0.045** | **6.6** | **0.62** | **90.3** |

**3.2 பௌதீக செயன்முன்னேற்றம்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமையால் அடையப்பட

வேண்டிய வருடாந்த இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், 2,911 வீட்டு உரிமையாளர்களுக்கான சேவை இணைப்புக்களானது மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட 1,235 வீட்டு உரிமையாளர்களின் இணைப்புக்களை உள்ளடக்கி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தது. மேலும், 290 வீட்டுருமையாளர்களுக்கான சேவை இணைப்புக்களானது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயன்முறையிலிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4,325 சேவை இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டது.

### 3.3 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது மானிய அமுலாக்கல் கையேட்டின் பின்னிணைப்பு 04 இன் பகுதி சீ(10) இனால் வேண்டப்பட்டவாறு இலங்கை மின்சாரசபையின் உள்ளகக்கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 626 இன் பிரகாரம், ஒவ்வொரு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட தனிப்பட்ட கணக்கீட்டு அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். எனினும், பேரேட்டு கணக்குகளின் தனிப்பட்ட தொகுதியினது செயற்திட்டத்தின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை பதிவு செய்வதற்கு தனிப்பட்ட பேரேட்டு கணக்குகள் இலங்கை மின்சார சபையால் பேணப்பட்டிருக்காததுடன் மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளுக்கு முரணாக இலங்கை மின்சார சபையின் பொதுப் பேரேட்டிலிருந்து எடுக்கப்பட்ட இலக்கங்களை அடிப்படையாக கொண்டு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.